அர்ச். லூக்காஸ் சுவிசேஷம் 6:45

நல்ல மனிதன் தன் இருதயமா கிய நல்ல பொக்கிஷத்தினின்று நல்லவைகளை எடுத்துக் காட்டுகிறான். கெட்ட மனிதனும் கெட்ட பொக்கிஷத்தினின்று கெட்டவைகளை எடுத்துக் காட்டுகிறான். ஏனெனில் இருதயத்தின் நிறைவாகவேதான் வாய் பேசுகின்றது.

பழமொழியாகமம் 18:21

மரணமுஞ் சீவியமும் நாவிலிருந்து அதை நேசிக்கிறவர்களே அதின் கனிகளைத் தின்பார்கள்.

எபேசியர் 4:29

கெட்ட பேச்சு ஒன்றும் உங்கள் வாயிலிருந்து புறப்படவேண்டாம். விசுவாசத்தின் நல்விருத்திக் கேதுவான பேச்சு உண்டானால், கேட்கிறவர்களுக்குப் பக்தியை வருவிக்கும்படி அதைப் பேசுங்கள்.

பழமொழியாகமம் 13:3

தன் வாயைக் காக்கிறவன் தன் ஆன்மாவையே காப்பாற்றுகிறான். ஆனால் பேச்சில் கவனமில்லாதிருக் கிறவன் தீமையைச் சகிப்பான்.

பழமொழியாகமம் 17:28

மதியீனனுங்கூட மௌனமா யிருப்பானாகில் ஞானியாகவும், தன் உதடுகளை மூடுவானாகில் அறிவுடை யோனாகவும் மதிக்கப்படுவான்.

பழமொழியாகமம் 15:4

சமாதான வாக்கு சீவிய விருட்சமாம்; அடக்கப்படாத வாய் பிராணனை நசுக்கும்.

இராயப்பர் பொது நிருபம் 1 3:9

நீங்கள் தின்மைக்குத் தின்மை செய்யாமலும், சாபத்துக்குச் சாபமிடா மலும் இருப்பதுந்தவிர, அதற்குப் பதி லாக நீங்கள் ஆசீர்வாதத்தைச் சுதந்த ரித்துக்கொள்ளும்படி அழைக்கப்பட்ட வர்களாகையால், ஆசீர்வதியுங்கள். (பழ. 17:13; உரோ. 12:17; 1 தெச. 5:15.)

அர்ச். மத்தேயு சுவிசேஷம் 12:36

ஆனால் மனுஷர்கள் பேசியிருக் கும் ஒவ்வொரு வீண் வார்த்தையின் பேரிலும் தீர்வை நாளில் கணக்குச் சொல்லுவார்களென்று உங்களுக்குச் சொல்லுகிறேன். மூ 36. ஒரு வீண் வார்த்தைக்கும் கணக்குக் கொடுக்கவேண்டியிருக்குமென்று சேசு நாதர்சுவாமி சொல்லுகிறதினாலே அற்பக் குற்றங்களுக்கு தண்டனையாக மறுலோகத்தில் உத்தரிக்கிற ஸ்தலமிருக்கிறதென்று வெளியாகிறது. 38. இவ்விடத்தில் அடையாளமென்பது புதுமை, அல்லது ஆச்சரியமான செய்கை என்று அர்த்தமாம். இன்னும் வேறிடங்களிலும் இப்படியே அர்த்தமாம்.

பழமொழியாகமம் 31:8

ஊமைக்காகவும் உன்னிடத்தில் வருகிற கைவிடப்பட்டவர்களுக் காகவும் உன் வாயைத் திற.

இயாகப்பர் பொது நிருபம் 1:19

எனக்கு மிகவும் பிரியமான சகோதரரே, இதை நீங்கள் அறிந்திருக் கிறீர்கள். எந்த மனிதனும் கேட்கிறதுக்குத் தீவிரமாயிருக்கக்கடவான்; பேசுகிறதற்கும் கோபிக்கிறதற்குமோ தாமதம் பண்ணக்கடவான். (பழ. 17;27.)

பழமொழியாகமம் 15:23

மனிதன் தன் வாயின் வாக்கில் சந்தோஷிக்கிறான்; காலத்துக்கேற்ற வசனமே உத்தமமாம்.

அருளப்பர் முதல் நிருபம் 3:18

என் பிள்ளைகளே, நம்முடைய சிநேகம் வார்த்தையிலும் நாவிலும் இராமல், கிரியையிலும் உண்மையிலும் இருக்கவேண்டியது.

பழமொழியாகமம் 10:19

அதிக பேச்சில் பாவமிராமல் போகாது; தன் உதடுகளை மட்டு கட்டுகிறவனோ மகா விவேகி.

பழமொழியாகமம் 15:1

சாந்தமான பதில் கோபத்தை அடக்கும்; கடுஞ் சொல் கோபத்தை மூட்டும் (பழ.25:15).

இயாகப்பர் பொது நிருபம் 3:2

நாமெல்லோரும் அநேக காரியங்களில் தவறிப்போகிறோம். ஆகிலும் யாதாமொருவன் வார்த்தையில் தவறாதிருந்தால், அவன் உத்தம புருஷன். ஏனெனில் அவன் தன் சரீரமுழுமையும் கடிவாளத்தால் நடப்பித்துக் கொள்ள வல்லவன்.

பழமொழியாகமம் 11:13

வஞ்சனையாய் நடக்கிறவன் இரகசியங்களை வெளியாக்குகிறான்; மனப் பிரமாணியோ தன் சிநேகித னின் இரகசியத்தை மறைக்கிறான்.

அர்ச். மத்தேயு சுவிசேஷம் 18:15

மேலும் உன் சகோதரன் உனக்கு விரோதமாய்க் குற்றஞ் செய்திருப்பா னாகில், நீ போய், நீயும் அவனுந் தனித் திருக்கையில் அவனைக் கடிந்துகொள். அவன் உனக்குக் காது கொடுத்தால் உன் சகோதரனை ஆதாயமாக்கிக்கொள் வாய். (லூக். 17:3: லேவி. 19:17; சர்வப். 19:13; இயா . 5:19, 20.)

சங்கீதங்கள் 71:8

எத்தியோப்பியர் அவருக்கு முன் பணிந்து வணங்குவார்கள்; அவருடைய சத்துருக்கள் (அவருக் குத்) தண்டம் பண்ணுவார்கள்.

சங்கப் பிரசங்கியாகமம் 10:12

ஞானியுடைய வாய்மொழி கள் மதுரமாயிருக்கின்றன; மூடனு டைய உதடுகளோ அவனைத் தாழே விழத்தாட்டும்.

அர்ச். லூக்காஸ் சுவிசேஷம் 12:3

ஏனென்றால் நீங்கள் இருளிலே சொன்னவைகள் வெளிச்சத்திலே சொல் லப்படும்; நீங்கள் அறைகளிலே காதுக் குள் பேசினது வீடுகளின் மேலே பிரசங் கிக்கப்படும்.

உரோமாபுரியார் 1 8:26

அவ்வண்ணமே, இஸ்பிரீத்துவானவரும் நமது பலவீனத்தைத் தாங் கிக்கொண்டுவருகிறார். எவ்வாறெனில், நாம் தக்கபடி மன்றாடிக் கேட்கிற தென்னவென்று அறியாமலிருக்கி றோம். ஆனால் இஸ்பிரீத்துவானவரே நமக்காக வாக்குக்கெட்டாத பெரு மூச்சுகளோடு பிரார்த்திக்கிறார்.

அர்ச். மத்தேயு சுவிசேஷம் 6:7

அல்லாமலும் நீங்கள் ஷெஜபம் செய்யும்போது அஞ்ஞானிகளைப் போல வளர்த்துச் சொல்லாதேயுங்கள். ஏனென் றால் தங்களுடைய சொல் மிகுதியினால் தங்கள் மன்றாட்டுக் கேட்டருளப்படு மென்று நினைக்கிறார்கள்.

பழமொழியாகமம் 15:22

ஆலோசனை எங்கே இல்லையோ அங்கே சிந்தனைகள் சிதைந்துபோகின்றன; யோசனைக் காரர் எங்கே அதிகமோ அங்கே (சிந்தனைகள்) பலப்படுகின்றன.

உரோமாபுரியார் 1 10:9

எப்படியெனில், ஆண்டவரா கிய சேசுநாதரை உன் வாயினால் அறிக்கையிட்டு, சர்வேசுரன் அவரை மரித்தோரிலிருந்து உயிர்ப்பித்தார் என்று உன் இருதயத்தில் விசுவசிப்பாயாகில் இரட்சிக்கப்படுவாய்.

சங்கீதங்கள் 105:1

ஆண்டவர் நல்லவராகவும், அவருடைய கிருபாகடாட்சம் என்று முள்ளதுமாகவும் இருக்கிறபடி யினாலே அவரைத் துதியுங்கள் (யூதித். 13:21).